செய்தி வெளியீடு எண். 126 நாள் 08.02.2010

## 36வது இந்திய சுறறுலா – தொழில் பொருட்காட்சிக்கு அமோக வரவேற்பு – இதுவரை 10 லட்சம் பேர் வருகை.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 22.12.2009 அன்று சென்னை தீவுத்திடலில் தொடங்கி வைக்கப்பட்ட 36வது இந்திய சுற்றுலா – தொழில் பொருட்காட்சிக்கு இதுவரை 10 லட்சம் பேர் வருகை புரிந்துள்ளனர். 1974ஆம் ஆண்டு முதல் சென்னை தீவுத்திடலில் சுற்றுலா – தொழில் பொருட்காட்சி ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது. இந்த பொருட்காட்சியில் மாநில அரசுத் துறைகள், அரசுத் துறை நிறுவனங்கள், மத்திய அரசுத் துறை நிறுவனங்களை உள்ளடக்கிய பல்வேறு அரங்குகள் ஆண்டுதோறும் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 22,12,2009 அன்று 36வது இந்திய சுற்றுலா – தொழில் பொருட்காட்சி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற விழாவில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த பொருட்காட்சியில் 25 மாநில அரசுத் துறைகளின் அரங்குகள் , 13 அரசுத் துறை நிறுவனங்களின் அரங்குகள், 4 மத்திய அரசு நிறுவனங்களின் அரங்குகள், 2 இதர மாநில அரசுத் துறைகளின் அரங்குகள் என மொத்தம் 44 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுதவிர 27 விற்பனை அரங்குகளும், 115 கடைகளும் இப்பொருட்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

தஞ்சை பெரிய கோவில் போன்று வடிவமைக்கப்பட்டுள்ள அண்ணா கலையரங்கில் பள்ளி, கல்லூரி மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகளும், இசை நிகழ்ச்சிகளும், கிராமியக் கலை நிகழ்ச்சிகளும் பொது மக்களை ஈர்க்கும்வண்ணம் நாள்தோறும் நடைபெற்று வருகின்றன. இதுதவிர பல வண்ண மீன் வகைகள், கடல்சார் உயிரினங்களைக் கொண்ட மீன்காட்சியகமும், சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. மாநில அரசால் நிறைவேற்றப்பட்டு வரும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் குறித்து இப்பொருட்காட்சியில் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தீவுத்திடல் வளாகத்தில் அமைந்துள்ள ஓட்டல் தமிழ்நாடு உணவகத்தில் பொது மக்களின் தேவைக்கேற்ப தரமான முறையில் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளும் கிடைக்கின்றன.

பொது மக்களின் அமோக வரவேற்பைப் பெற்றுள்ள இப்பொருட்காட்சியினை இதுவரை மொத்தம் 10 லட்சம் பேர் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். அதில் 2 லட்சம் மாணவ – மாணவியரும் அடங்குவர். இப்பொருட்காட்சியின் வாயிலாக இதுவரை 1 கோடியே 59 லட்சம் ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.

இப்பொருட்காட்சியினை வருகிற 15 .03.2010 வரை நடத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. பொது மக்கள் அனைவரும் பொருட்காட்சியினைக் கண்டு இன்புறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9